மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லம்மாள் | நாள் | 13.04.2023 |
| கணவர் பெயர் | சுப்ரமணியம் | | |

பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :–

1) தாவா சொத்திற்குரிய சர்வே எண், பிளாக் நெம்பர், வார்டு நெம்பர் ஆகியவை பற்றி எனக்கு தெரியுமா என்றால், எனக்கு சர்வே எண் குறித்தும், பிளாக் நெம்பர் குறித்தும் தற்போது சரியாக ஞாபகமில்லை. நான் 27 வது வார்டில் வசித்து வருகிறேன். தற்போது அந்த 27–வது வார்டு எண் மாறிவிட்டது. புதிய வார்டு எண் எனக்கு சரியாக நினைவில்லை.

2) வருவாய் துறை ஆவணங்களின் படி வார்டு A, B, C, D என பிரிக்கப்பட்டுள்ள வகையில் நான் தற்போது எந்த வார்டில் வசித்து வருகிறேன் என என்னால் சொல்ல முடியுமா என்றால், நான் தற்போது மறந்துவிட்டேன். நான் எந்த சர்வே எண், பிளாக் எண், வார்டு ஆகியவற்றில் வசித்து வருகிறேன் என்ற விவரம் எனக்கு தெரியாததால்தான் அவை குறித்து என் வழக்குரை சொத்து விவரத்தில் நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரியல்ல.

3) என் கணவர் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என நான் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு 50 வருடங்களுக்கு முன்பு என் கணவர் எவ்வளவு விஸ்தீரணம் மற்றும் எவ்வளவு நீள, அகலங்கள் உள்ள புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு அதுகுறித்து தெரியாது.

4) சுமார் 30 வருடங்களுக்கு முன்பு மேற்படி நிலத்தில் கூரை வீடு அமைக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி கூரைவீடு எத்தனை சதுரடியில் அமைக்கப்பட்டது என்றால், நாங்கள் அளந்து பார்க்கவில்லை. மேற்படி கூரைவீட்டை மாற்றிவிட்டு அந்த இடத்தில் தார்சு வீடு கட்டப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் எவ்வளவு சதுரடியில் மேற்படி தார்சு வீடு கட்டப்பட்டது என்றால், அதையும்

அளக்கவில்லை. ஆனால் மேற்படி தார்சு வீட்டிற்கு வடக்குபுறமாக கிழமேல் தென்வடல் இருபுறமும் சுமார் 15 அடி அளவில் காலி நிலம் விட்டுதான் அந்த வீடு கட்டப்பட்டது.

5) இன்றைய தேதி வரையிலும் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்த நிலத்தில் எத்தனை சதுரடியில் தார்சு வீடு கட்டப்பட்டுள்ளது என்பது குறித்து நான் அளந்து தெரிந்துகொள்ளவில்லை என்றால், சரிதான்.

6) என் வீட்டை ஒட்டி கிழக்குபுறமாக முதலாவதாக ஜானகி வீடும், அடுத்து இரண்டாவதாக ரத்னா என்பவரது வீடும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி இரண்டு வீடுகளும் கிழக்கு பார்த்த வாசல் என்றால், சரிதான். என் வீடு வடக்கு பார்த்த வாசல் கொண்டது.

7) என் வீட்டிற்கும், மேற்படி ஜானகி மற்றும் ரத்னா ஆகியோரது வீட்டிற்கும் கிழக்குபுறமாக தென்வடலாக செல்லும் நகராட்சிக்கு சொந்தமான நடைபாதை ஒன்று உள்ளது என்றால், சரிதான். என் வீட்டில் இருந்து வடக்கு வாசல் வழியாக கிழபுறமாக வந்தால், தெற்குபுறம் ரத்னா வீடும், வடக்குபுறமாக சீனிவாசன் வீடும் அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி இருவரது வீட்டிற்கும் நடுவில் கிழமேல் சந்து அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி சந்தின் வழியாகத்தான் மேற்படி தென்வடல் சந்தை அடைந்து பிறகுதான் பிரதான சாலையை அடைய முடியும் என்றால், சரிதான்.

8) மேற்படி என் வீட்டிற்கு கிழக்குபுறம் அமைந்துள்ள ரத்னா மற்றும் ஜானகி ஆகியோரது வீட்டிற்கும், என் வீட்டிற்கும் நடுவே ஏதேனும் காம்பவுண்ட் சுவர் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. மேற்படி வீடுகள் இணைத்து கட்டப்பட்டுள்ளது.

9) என் வீட்டிற்கு தெற்குபுறம் யாருடைய வீடு உள்ளது என்றால், ரங்கராஜன் என்பவரது வீடு உள்ளது. அதிலும் எந்த விதமான காம்பவுண்ட் சுவரும் இல்லை. ஆனால் மேற்படி ரங்கராஜன் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் நடுவே 1–1/2 அடி

அளவில் மழை நீர் வடிகாலுக்காக ஒரு சந்து உள்ளது.

10) என் வீட்டிற்கு மேற்குபுறம் மாரியம்மாளின் வாரிசுகள் சரவணன் மற்றும் முருகேசன் ஆகியோரது வீடுகள் உள்ளது. மேற்படி சரவணன் மற்றும் முருகேசனின் வீட்டிற்கும், என் வீட்டிற்கும் இடையே காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால், உள்ளது. நான் கட்டியுள்ளேன்.

11) என் வீட்டிற்கு வடக்குபுறம் இவ்வழக்கின் பிரதிவாதி மணியரசின் காம்பவுண்ட் சுவரும், அதற்கு அடுத்து அவருக்கு சொந்தமான காலி நிலமும், அதனை ஒட்டி அவரது குடியிருப்பு வீடும் அமைந்துள்ளது என்றால், சரிதான். என் வீட்டிற்கு வடக்குபுறம் நான் ஏதேனும் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளேனா என்றால், கட்டியுள்ளேன்.

12) என் வீட்டிற்கு வடக்குபுறமுள்ள மணியரசின் வீட்டிற்கும், என் வீட்டிற்கு மேற்குபுறமுள்ள மாரியம்மாள் வீட்டிற்கும் இடையே 2 அடி அகலத்தில் மழை தண்ணீர் வடிந்து செல்வதற்காக ஒரு சந்து விட்டுதான் என் வீட்டை கட்டியுள்ளேன்.

13) மேற்படி மாரியம்மாளின் மகன் சரவணன், அவரது வீட்டிற்கு வடக்குபுறம் 3 அடி அகலத்திலும், 25 அடி நீளத்திலும் ஒரு சந்து விட்டுள்ளார் என்றால், சரிதான். ஆனால் அது எத்தனை அடி அகலம் மற்றும் எத்தனை அடி நீளம் என்று எனக்கு தெரியாது.

14) என் வீட்டிற்கு வடக்குபுறமுள்ள 2 அடி அகலத்திலுள்ள சந்தை பிரதிவாதி மணியரசுதான் மேற்படி அவரது சுவற்றை பராமரிப்பதற்காக விட்டுள்ளார் என்றால், சரியல்ல. பிரதிவாதி மணியரசு மேற்படி 2 அடி அகலம் மற்றும் 25 அடி நீளமுள்ள கிழமேல் சந்தில் அதன் மேற்குபுறம் கதவு வைத்துள்ளார் என்றால், வைத்துள்ளார். ஆனால், இவ்வழக்கு பிரச்சனை பின்புதான் அவ்வாறு சந்து வைத்துள்ள விவரமே தெரிய வந்தது.

15) மேற்படி 2 அகல, 25 அடி நீளமுள்ள கிழமேல் சந்தை என் கணவர் ஆக்கிரமித்து

அதன் அனுபவத்தில் இருந்தாரா அல்லது பிரதிவாதி மணியரசு அதன் அனுபவத்தில் இருந்தாரா என்றால், என் கணவர் உயிருடன் இருந்தபோது என் வீட்டை ஒட்டி வடக்குபுறமுள்ள தென்வடல் கிழமேல் இருபுறமும் 15 X 15 அடி அளவுள்ள காலி இடத்தை பிரதிவாதி மணியரசுக்கு கொடுத்துவிட்டு அதற்கு பதில் எங்கள் வீட்டை ஒட்டி மேற்குபுறம் மழை நீர் வடிந்து செல்வதற்கு 2 அடி அகலத்தில் உள்ள மேற்படி சந்தை என் கணவர் பரிமாற்றம் செய்துகொண்டனர்.

16) நான் சொல்வது போல் என் கணவரும், மேற்படி பிரதிவாதி மணியரசும் எவ்வித இடத்தையும் பரிமாற்றம் செய்துகொள்ளவில்லை என்றாலும், பிரதிவாதி நிலத்தை அபகரிப்பதற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

17) அவ்வாறு எந்த தேதியில் பரிமாற்றம் செய்துகொண்டனர் என்றால், வாய்மொழியாக பரிமாற்றம் செய்துகொண்டனர். எந்த தேதி என்று சரியாக நினைவில்லை. ஆனால் சுமார் 35 வருடங்கள் இருக்கும்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.